**07.11.2025**

DVC.No. 08/2020 ஜெயசீலி பிரித்தா க/பெ. கில்பர்ட் ஜெயசீலன் PW1

**குறுக்கு விசாரணை (எதிர்மனுதாரர் தரப்பில்)**

நான் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் என்னுடைய நகைகள், பொருட்களை திருப்பி தரவேண்டியும், நஷ்ட ஈடு கோரியும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிர் உரையில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. திருமணத்திற்கு முன்னர் 1ம் எதிர் மனுதாரர் எனது உறவினர் என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரரின் சகோதரர் தான் எனது சகோதரியை திருமணம் செய்துள்ளார் என்றால் சரிதான். அவர்கள் இருவருக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டு விவாகரத்து வழக்கு தாக்கல் செய்து, அதன் பின்னர் தற்போது சேர்ந்து வாழ்கிறார்கள் என்றால் சரிதான். திருமணத்தின் போது எங்கள் வீட்டில் செய்த சீர்வரிசை பொருட்கள் குறித்து ஒரு ஆவணம் தயார் செய்து அதில் இருவீட்டை சேர்ந்த முக்கிய நபர்கள் கையொப்பம் செய்தனர் என்றால் சரிதான். என்னுடைய பிரமாண வாக்குமூலத்திற்கு வழக்கறிஞருக்கு யார் தகவல் சொன்னார்கள் என்றால் நான் தான் சொன்னேன். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 1, 2, 3 எதிர் மனுதாரர்கள் என்னை அடித்து துன்புறுத்தியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் 1, 2, 3 எதிர்மனுதாரர்கள் என்னை அடித்து துன்புறுத்தியதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் என்ன படித்துள்ளேன் என்றால் M.Sc., B.Ed., M.Phil படித்துள்ளேன். தற்போது என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் புள்ளியியல் துறையில் வேலை பார்த்து வருகிறேன். திருமணத்தின் போது

நான் எந்த வேலைக்கும் செல்லவில்லை என்றால் சரிதான். நான் சமூக நலத்துறை அலுவலரிடம் கொடுத்த மனுவில் 07.06.2014ம் தேதி 1, 2 எதிர்மனுதாரர்கள் என்னை தரக்குறைவாக பேசியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த மனுவில் 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் என்னை அடித்ததாகவோ, வரதட்சணை கேட்டதாகவோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் திருமணத்திற்கு பிறகு எவ்வளவு நாட்கள் திருக்காட்டுப்பள்ளியில் இருந்தேன் என்றால் 6 முதல் 8 மாதங்கள் இருந்தேன். நான் திருமணத்திற்கு பிறகு 22 நாட்கள் தான் திருக்காட்டுப்பள்ளியில் இருந்தேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் என்னிடம் எந்த தகராறும் செய்யவில்லை என்றால் சரியல்ல. திருமணத்திற்கு மறுநாள் திருக்காட்டுப்பள்ளிக்கு சென்றோம் என்றால் சரிதான். திருக்காட்டுப்பள்ளியில் எனது மாமனார், மாமியார் வீடு கூரை வீடு என்றால் சரிதான். நான் 1ம் எதிர்மனுதாரருடன் தனியாக வேறொரு வீட்டில் வசித்தேன் என்றால் சரிதான். நான் குடியிருந்த வீட்டிற்கும், 2, 3 எதிர்மனுதாரர்கள் குடியிருந்த வீட்டிற்கும் இடையே அரை கிலோமீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரியல்ல, அதைவிட குறைவாக இருக்கும். திருமணத்திற்கு பிறகு எவ்வளவு நாட்கள் கழித்து எனது அப்பாவிற்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டது என்றால் 2014ம் வருடம் ஜுன் முதல் வாரத்தில் உடல் நலக்குறைவு ஏற்பட்டது. எனது அப்பாவிற்கு உடல் நலக்குறைவு ஏற்பட்ட போது நான் மட்டும் தான் சென்று பார்த்தேன் என்றால நான் 1ம் எதிர்மனுதாரரிடம் சொன்னேன். அவர் வரவில்லை. அவருடைய பெரிய அண்ணியை என்னுடன் அனுப்பி வைத்தார். 07.06.2014ம் தேதிக்கு பிறகு நான் 1ம் எதிர்மனுதாரருடன்

திருக்காட்டுப்பள்ளியில் வாழ்ந்ததற்கான எந்த ஆவணத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இலால்குடி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த புகாரில் என்ன விவரம் குறிப்பிட்டிருந்தேன் என்றால் மீண்டும் சேர்ந்து வாழ வேண்டும் எனவும், பிரச்சனையை பேசி தீர்த்துக் கொள்ள வேண்டும் எனவும் கேட்டிருந்தேன். நான் 1ம் எதிர்மனுதாரருக்கு எதிராக எப்போது விவாகரத்து வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் 2017ம் வருடம் விவாகரத்து வழக்கு தாக்கல் செய்தேன். விவாகரத்து வழக்கில் நான் தாக்கல் செய்த மனுவில் என்ன காரணம் குறிப்பிட்டிருந்தேன் என்றால் 1ம் எதிர்மனுதாரர் குடும்ப வாழ்வில் ஈடுபடவில்லை என குறிப்பிட்டிருந்தேன். அந்த விவாகரத்து மனுவில் 1ம் எதிர்மனுதாரர் ஆண்மையற்றவர், தாம்பத்ய வாழ்வில் ஈடுபடவில்லை என குறிப்பிட்டுள்ளேனா என்றால் அதுகுறித்து எனக்கு தெரியவில்லை. திருமணத்தின் போது எனக்கு எங்களது வீட்டில் கொடுக்கப்பட்ட நகைகள் தற்போது என் வசம் உள்ளது என்றால் சரிதான். என்னுடைய உறவினர்கள், 1ம் எதிர்மனுதாரருக்கும் உறவினர்கள் என்பதால் 1ம் எதிர்மனுதாரருக்கு என்னுடைய உறவினர்கள் செய்த நகைகளை 1ம் எதிர்மனுதாரர் திருப்பி செய்துவிடுவார் என்றாலும், அதனை கேட்பதற்கு எனக்கு உரிமை இல்லை என்றாலும் சரியல்ல. நான் பணியில் சேரும் போது என்னுடைய அசல் ஆவணங்களை ஆராய்ந்து பார்த்து பின்னர் தான் பணியில் சேர்ந்தேன் என்றால் சரிதான். நான் மனுவில் சொல்லியுள்ளது போல் 1முதல் 3 எதிர்மனுதாரர்கள் என்னுடைய கல்வி சான்றிதழ் உட்பட பல ஆவணத்தை என்னை வேலைக்கு செல்லவிடாமல் தடுப்பதற்காக எடுத்து வைத்து தர மறுத்தார்கள் போன்ற சம்பவம் எதுவும்

நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் 13.01.2017 அன்று சமூக நலத்துறை அலுவலரிடம் கொடுத்த புகாரில் 2, 3 எதிர் மனுதாரர்கள் என்னுடைய கல்வி சான்றிதழ் உட்பட பல ஆவணங்களை எடுத்து வைத்துக் கொண்டு என்னை வேலைக்கு செல்லவிடாமல் தடுக்கிறார்கள் என சொல்லியிருந்தேனா என்றால் அதுகுறித்து எனக்கு ஞாபகமில்லை.

எதிர்மனுதாரர் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக **18.11.2025** அன்று ஒத்திவைக்கப்படுகிறது.

ஒப்பம்/–சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/ ARUNACHALAM Digitally signed by ARUNACHALAM Date: 2025.11.07 13:30:05 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி